

தமிழ் வளர்த்த இத்தாலிய பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (08.11.2025) சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், பி.கே.சேகர்பாபு, மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், செய்தித் துறை செயலாளர்(பொறுப்பு) திருமதி வே.அமுதவல்லி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், தமிழறிஞர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், மழையம்பட்டு ஊராட்சி, தக்கா பகுதியில் ரூ.18.00 லட்சம் மதிப்பீட்டில் புதிய ஒன்றிய தொடக்கப்பள்ளி இரண்டு வகுப்பறை கட்டிடத்தை கழக துணை பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் திறந்து வைத்தார். மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, ஒன்றிய செயலாளர்கள் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், கை.ரா. சடகோபன், நகர செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், ஒன்றிய நிர்வாகிகள் MJ.கிருஷ்ணமூர்த்தி, காசி. விஸ்வநாதன், மோகன்ராஜ், ஏழுமலை, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் நிர்மல்ராஜ், ஒன்றிய கவுன்சிலர் ஸ்ரீதர், ஊராட்சி மன்ற தலைவர் இரா.கிருஷ்ணராஜ் மாணவர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக நவம்பர் 11-ல் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

செஞ்சி, நவ. 9-

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R)கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வருகிற நவம்பர் 11 ஆம் தேதி அன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தலைவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.அந்த வகையில் விழுப்புரத்தில் நவம்பர் 11ஆம் தேதி எஸ்.ஐ. ஆர்க்குஎதிராக நவம்பர் 11 மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.



இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள்,மாவட்ட கழகத்தினர்திரளாக பங்கேற்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கையில் கூறுகையில்:

இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R). கொண்டு வந்துள்ளது.சிறுபான்மை யினர் வாக்குகள், பட்டியலின மக்களின் வாக்குகள், மற்றும் பாஜகவின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றை குறிவைத்து நீக்கும் நோக்கத்தோடு தகுதியுள்ள வாக்காளர்கள் எண்ணிக்கை ,தகுதியற்ற வாக்காளர்களை சேர்க்கும் சதி திட்டத்தோடு ஒன்றிய பாஜக அரசை தனக்கு பாதுகாவலாக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனை செய்திருப்பதோடு, பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் கலையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் SIRதிட்டத்தை செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையை பறிப்பதாகவும்,ஜனநாயகத்தை அடியோடு குழி தோண்டி புதைப்பதாகவும் உள்ளது .அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது.சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு SIR ன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களை பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடுகிறது

எனவே SIR சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும் படி தேர்தல் ஆணையத்திற்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவி மடுக்காத ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகாரப் போக்கில்இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு SIRகொண்டு வந்துள்ளதை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் வருகிற நவம்பர் 11ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று காலை 10 மணிக்கு விழுப்புரம்புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்நடைபெறுகிறது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி,மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதியில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,கழக நிர்வாகிகள்,அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்ட கூட்டத்தை வெற்றி பெற செய்யுமாறு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின்

# மாநில - மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, நவ.9-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படி கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் ஆலோசனைக்கூட்டம் வரும் 13.11.25 (வியாழன்) அன்று காலை 10 மணியளவில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாநில நிர்வாகிகள், மாவட்ட , மாநகர அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மற்றும் கழக ஆக்கப்பணிகள் தொடர்பாக.

இவ்வாறு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர். அ. சுபேர்கான் தெரிவித்துள்ளார்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக பிரதிநிதி - தாம்பரம் நீதிமன்ற அரசு வழக்கறிஞர்

# மொழிப்போர் தியாகி எஸ்.கே.நெப்போலியன் மறைவு!

பல்லாவரம், நவ9-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி அனகாபுத்தூரில் வசித்து வந்த 35 ஆண்டு காலத்துக்கு மேலாக மாவட்டக் கழக பிரதிநிதியாக கழகத்தின் தலைசிறந்த சொற்பொழிவாளராக வழக்கறிஞராக அனைவருடைய மனதிலும் நீங்கா இடம் பிடித்து வந்தவர் தேர்தல் காலங்களில் அனைத்து வேட்பாளர்களுக்கும் வேட்பாளர்களைப் பற்றி மக்களிடத்தில் பிரச்சார வாகனங்களில் அவர்களின் சிறப்பை எடுத்துரைத்து வாக்கு சேகரிக்கும் பணியில் அவருக்கு நிகர் வேறு யாருமில்லை.



தாம்பரம் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருந்து கழகத் தோழர்களுக்காக கழகத்தின் பிரச்சினைகளுக்கான வழக்குகளில் வாதாடி வெற்றி கண்டு கழகத் தோழர்களை காத்தவர் இவ்வாறு பம்மல் வடக்கு பகுதி மாவட்டக் கழகப் பிரதிநிதியாக அனகாபுத்தூர் மட்டுமின்றி காஞ்சி வடக்கு மாவட்டம் முழுவதும் அனைத்து கழகத் தோழர்களிடமும் நிர்வாகிகளிடமும் அன்பும் பாசத்துடனும் பழகக்கூடியவர்.

தற்போது தாம்பரம் நீதிமன்றத்தின் அரசு வழக்கறிஞராகவும் பணியாற்றி வந்த வழக்கறிஞர் எஸ்.கே.நெப்போலியன் அவர்கள் 8112025 நேற்று மாலை 3 மணி அளவில் உடல் நலக்குறைவால் இயற்கை எழுதினார்.

அன்னாரின் திருவுடல் அனகாபுத்தூர் கன்னியம்மன் கோயில் தெருவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று 9112025 அன்று மாலை 3.00 மணி அளவில் அன்னாரின் இறுதி ஊர்வலம் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அருகில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் வேளச்சேரி மெயின்ரோட்டில் அமைந்துள்ள சாலையோரப் பூங்காவை சென்னை பெருநகர மாநகராட்சி தூய்மை பணியில் ஈடுபட்டபோது வார்டு மாமன்ற உறுப்பினரும், கழக தேர்தல் பணிக்குழு செயலாளருமான வேளச்சேரி பெ.மணிமாறன் ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர், ஆய்வாளர், பணியாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### மக்கள் முதல்வரின் மனிதநேய விழா :

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் “அன்னம் தரும் அமுதகரம்” நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, நவ. 9 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20 முதல் 2026 பிப்ரவரி 19 வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் நடைபெறும் காலை உணவு வழங்கும் “அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்” 10.11.25 முதல் 22.11.25 வரை நடைபெறும் இடங்களின் விவரத்தினை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு பின்வருமாறு அறிவித்துள்ளார்.

நாள் 10.11.25 திங்கட்கிழமை 264ஆம் நாள் எழும்பூர் தெற்கு பகுதி 1) வட்டம் 58, அல்லிக்குளம், (சென்ட்ரல் ரயில் நிலையம் அருகில்) , வட்ட செயலாளர் V. விஜயகுமார், 2) வட்டம் 58அ, ராமவிலாஸ் ஹோட்டல் அருகில், சூளை, வட்ட செயலாளர் R. பாபு

நாள் 11.11.25 செவ்வாய்க்கிழமை 265 ஆம் நாள், வில்லிவாக்கம் மேற்கு பகுதி

1) வட்டம் 95, வில்லிவாக்கம், வட்ட செயலாளர், மா.அகிலன், 2) வட்டம் 95 அ, எம்பார் நாயுடு 2வது தெரு, வட்ட செயலாளர், பா. ஜானி

நாள் 12.11.25 புதன்கிழமை 266 ஆம் நாள் அம்பத்தூர் வடக்கு பகுதி, 1) வட்டம் 80, புதூர் பேருந்து நிலையம் அருகில், வட்ட செயலாளர் வெ. ராதாகிருஷ்ணன், 2) வட்டம் 81, அம்பத்தூர் OT, வட்ட செயலாளர் மு .இரகு

நாள் 13.11.25 வியாழக்கிழமை 267 ஆம் நாள் கொளத்தூர் மேற்கு பகுதி 1) வட்டம் 69அ, பாலவாயல் ரோடு, அகரம் ( ராமர் கோயில் அருகில்), வட்ட செயலாளர் P.அதிபதி, 2) வட்டம் 66, ஸ்ரீநகர் காலனி, வட்ட செயலாளர் N. ராமச்சந்திரன்

நாள் 14.11.25 வெள்ளிக்கிழமை 268 ஆம் நாள் திரு.வி.க நகர் வடக்கு பகுதி 1) வட்டம் 72, வெங்கடேசபுரம் புதிய காலனி, கன்னிகாபுரம் வட்ட செயலாளர் M.A டீக்கா, 2) வட்டம் 72அ, நேரு நகர், டிக்கால்டர் சாலை, புளியந்தோப்பு, வட்ட செயலாளர் M. Zஅபோய்

நாள் 15.11.25 சனிக்கிழமை 269 ஆம் நாள் துறைமுகம் தொகுதி 1) துறைமுகம் கிழக்கு பகுதி, வட்டம் 55, ஏழு கிணறு தெரு, (மாமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில்), வட்ட செயலாளர், எல். சத்யநாராயணன், 2) துறைமுகம் மேற்கு பகுதி, வட்டம் 57, கல்யாணபுரம் பள்ளம் (ரேஷன் கடை) வால் டாக்ஸ் ரோடு, வட்ட செயலாளர், ஜி.ராமமூர்த்தி.

நாள் 16.11.25 ஞாயிற்றுக்கிழமை 270 ஆம் நாள் திரு.வி.க நகர் தெற்கு பகுதி

1) வட்டம் 73, நியூ பேரன்ஸ் ரோடு, சுமன் கார்ஸ் அருகில், வட்ட செயலாளர் எம் .தமீம், 2) வட்டம் 75அ, எஸ். எஸ் புரம் பகுதி, முதல் தெரு, ஓட்டேரி, வட்ட பொறுப்பாளர் பா. பி .தாஸ்

நாள் 17.11.25 திங்கட்கிழமை 271 ஆம் நாள் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி, 1) வட்டம் 98, ரங்கையா தெரு, சோமசுந்தரம் ஆறாவது தெரு சந்திப்பு வட்ட செயலாளர் K.பாஸ்கர்

2) வட்டம் 98 அ, மேட்டு தெரு சாய்பாபா கோயில் அருகில், வட்ட செயலாளர் சி. தேவராஜ்

நாள் 18.11.25 செவ்வாய்க்கிழமை 272 ஆம் நாள் எழும்பூர் வடக்கு பகுதி, 1) வட்டம் 99, பிரிக்லின் ரோடு, திடீர் நகர் சந்திப்பு, வட்ட செயலாளர் ஆர்.எம். ரங்கநாதன்

2) வட்டம் 99 அ, புல்லாபுரம், கீழ்ப்பாக்கம், வட்ட செயலாளர் சி .சேகர்

நாள் 19.11.25 புதன்கிழமை 273 ஆம் நாள் அம்பத்தூர் கிழக்கு பகுதி, 1) வட்டம் 82 அ, கள்ளிகுப்பம் ஆர்ச் அருகில், வட்ட செயலாளர் ஆ. சுந்தரராஜ், 2) வட்டம் 82, 20B பஸ் நிலையம் அருகில், மேனாம்பேடு, வட்ட செயலாளர் மூ.சண்முகம்

நாள் 20.11.25 வியாழக்கிழமை 274 ஆம் நாள் - அம்பத்தூர் தெற்கு பகுதி

1) வட்டம் 88, பாடி வீதி, அண்ணா அறிவு வளர்ச்சி மன்றம், வட்ட செயலாளர் சி. சீனிவாசன்

2) வட்டம் 89, வடிவு நகர் திமுக கழக அலுவலகம், வட்ட செயலாளர் M.E சேகர், எம்.சி.

நாள் 21.11.25 வெள்ளிக்கிழமை 275 ஆம் நாள் கொளத்தூர் கிழக்கு பகுதி,

1) வட்டம் 68, பாலசுப்பிரமணியன் சாலை, பெரியார் நகர், மைக்கில் உணவகம் அருகில் வட்ட செயலாளர் P.ஆதவன் மணி, 2) வட்டம் 67அ, பல்லவன் சாலை, கால்பந்து மைதானம் எதிரில், வட்ட செயலாளர் K.ஜார்ஜ்குமார்

நாள் 22.11.25 சனிக்கிழமை 276 ஆம் நாள் துறைமுகம் தொகுதி, 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55, அம்மன் கோயில் தெரு, சடையப்பன் தெரு சந்திப்பு, ஏழு கிணறு, வட்ட செயலாளர் S. புகழேந்தி, 2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம்: 57 அ, அண்ணா பிள்ளை தெரு, டேவிட்சன் தெரு சந்திப்பு (லோன்ஸ்குயர் அருகில்), வட்டச் செயலாளர், பா. அண்ணாதுரை.

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, S.முரளி, R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் கலைமகள் உயர்நிலைபள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து தூய்மை பணியாளர்கள் நல வாரிய கார்டு 25 நபர்களுக்கு, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் 10 நபர்கள், காசநோய் ஊட்டசத்து பெட்டகம் 2 நபர்கள், தொழுநோயாளிக்கு மருத்து பெட்டகம் 1 நபருக்கு வழங்கி பல்வேறு மருத்துவ பாரிசோதனைகள் பார்வையிட்டு துறை அதிகாரிகளிடம் பயனாளிகளுக்கு மருத்துவ சேவை வழங்குமாறு தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வேண்டுகோள் விடுத்தார். உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், எம்.கேசவன், மு.பாஸ்கர், எஸ்.உதயகுமார், எஸ்.எம்.திருநாவுக்கரசு, கே.வி.நாகராஜ், டி.கே.ராஜா. அர்ஜீனன், பி.கே.நாரயணசாமி, பா.பரத்குமார், எம்.மெய்யழகன், ரெட்டம்பேடு செந்தில், எஸ்.நந்தகோபால், சூப்.முனியாண்டி, பழக்கடைசெல்வம், சி.ரவி,அருண்மொழி, விக்கி, சரத்குமார், பாலாஜி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.